# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழு

## அழைக்கும் திறத்தவர் கொடுப்பனவுசெய்யும் (அ.தி.கொ.) முறைமையை அறிமுகம்செய்வற்கு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வையை மீளாய்வுசெய்வதற்கான பகிரங்க விசாரணை

## 1996ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 12ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவால் வழங்கப்பட்ட கட்டளை.

அழைக்கும் திறத்தவர் கொடுப்பனவுசெய்யும் (அ.தி.கொ.) முறைமையை அறிமுகம் செய்வதற்கு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வையை மீளாய்வுசெய்வதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு (இதனகத்ததுப் பின்னர் குழு என அழைக்கப்படும்) 2005 சனவரியில் செய்தி ஊடகத்தின் ஊடாகப் பொது மக்களிடமிருந்து எழுத்து மூலமான சமர்ப்பணங்களைக் கோரியிருந்தது. பத்திரிகை அறிவித்தல்கள் தேசிய செய்தித் தாள்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்பட்டன. இந்த அறிவித்தல் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்துதல் ஆணைக்குழுவின் (இ.தொ.ஒ.ஆ,) இணையத் தளத்திலும் (Website) வெளியானது. எழுத்திலான சமர்ப்பணங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட இறுதித் திகதி 2005 பெப்ரவரி 21 ஆகும். பொது மக்களால் செய்யப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கையை கருத்திற்கொண்டு இறுதித் திகதியைப் பின்னர் 2005 மார்ச் 31வரை நீடித்தது. ஏழு நிலைமாற்றப்பட்ட பொதுத் தொலைப்பேசி வலையங்களின் (PSTN) செயற்பாட்டாளர்களும் அதாவது, ஸ்ரீ லங்கா ரெலிகம் (பிறைவேட்) லிமிட்டெட், சன்டெல் லிமிட்டெட், லங்கா பெல் (ிறைவேட்) லிமிட்டெட், டயலோக் டெலிகம் லிமிட்டெட், செல்டெல் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட், மொபிடெல் (பிறைவேட்) லிமிட்டெட், ஹட்கிசன் டெலிகொன்யூனிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்பவற்றிற்குப் பகிரங்க விசாரணைபற்றி பணிப்பாளர் தலைமையதிபதியால் அறிவிக்கப்பட்டது. பகிரங்க விசாரணையின் நோக்கெல்லை பத்திரிகை அறிவித்தலின் ஊடாக பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் சார்புடைய ஆவணங்களும் பொது மக்களுக்குக் கிடைக்கச்செய்யப்பட்டன. குழு பின்வருவனவற்றின் அடிப்படையில் எழுத்திலான சமர்ப்பணங்களை சமர்ப்பிக்குமாறு குறித்துரைத்துப் பொது மக்களுக்கு அழைப்பு விடுத்தது:

செலவு மாதிரிகைளின் ஏற்றுக்கொள்ளத்தகு தன்மையும் வலையமைப்பு முடிவுறுக் கட்டணங்களைக் கணிப்பிடும் முறையும்.
அ.தி.கொ. முறைமையின்கீழ் மேலதிக அறவீடு (செல்லிட முடிவுறுக்கட்டணம்) நிலையுறு அணுக்க வாடிக்கையாளர்களுக்குக் கட்டுப்படியாகுமா?
அ.தி.கொ. முறைமையின்கீழ் உள்வரு அழைப்பின் இலவச நிமிடத்துடன்/தீர்க்கமான உள்வரு அழைப்புக் கட்ட வீதங்களுடன் பிணிக்கப்பட்ட செலூலர் செல்லிட தீர்வைத் திட்டங்களுக்கு என்ன நடக்கும்? அவை மீளாய்வுசெய்யப்படவேண்டுமா? எப்படி? ஏன்?
அ.தி.கொ. தீர்வு தொடர்பிலான வேறு எவையேனும் பிரச்சினைகள்.

பகிரங்க விசாரணைக்குப் பரந்தளவிலான பிரசாரம் அளிப்பதற்காக 2005 பெப்ரவரி 18ஆம் திகதி பணிப்பாளர் தலைமையதிபதியின் தலைமையில் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் பத்திரிகை மாநாடொன்று நடைபெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்களிடமிருந்து விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் 4,080 எழுத்திலான சமர்ப்பணங்கள் குழுவுக்குக்

கிடைக்கப்பெற்றன. சமா்ப்பணங்கள் தொலைத்தொடா்பு சேவைகள் வழங்குவோா், பாவனையாளா் கழகங்கள்/சங்கங்கள், கம்பனிகள் என்பவற்றிற்கும் உயா் தொழிலா்கள், மற்றும் தனியாட்களுக்கும் அனுப்பப்பட்டன. இரண்டு செலூலா் செய்முறையாளா்களான மொபிடெல் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஹட்கிசன் டெலிகொன்யூனிகேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்பவற்றைத் தவிர PSTN செய்முறையாளா்கள் அனைவரும் தங்களது எழுத்துமூலமான சமா்ப்பணங்களை சமா்ப்பித்திருந்தன.

எழுத்துமூலமான சமா்ப்பணங்களின் பகுப்பாய்வு

மேலே 1 முதல் 4 வரை நிரற்படுத்தப்பட்டதான குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றி எழுத்திலான சமா்ப்பணங்களைச் செய்யுமாறு பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் பொது மக்கள் அழைக்கப்பட்டபோதிலும் பெரும்பான்மையானோா் விதித்துக்கைக்கப்பட்ட விடயங்கள் பற்றி சமா்ப்பணங்களைச் செய்யவில்லை. ஆனால் மொத்தத்தில் அ.தி.கொ. முறை நடைமுறைப்படுத்தப்படுவதை வன்மையாக எதிா்த்தனா்.

மொத்தம் 4080 சமா்ப்பணங்களுள் 1619 சமா்ப்பணங்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட பொது மக்கள்/பாவனையாளா் குழுக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவையாகும். ஒவ்வொரு பிரிவிலும் இவற்றின் உள்ளடக்கங்கள் ஒரே மாதிரியாகவே இருந்தன. இவை நிலையுறு அணுக்கச் சந்தாதாரா்களின் கட்டுப்படியாகும் தன்மை பற்றிய பிரச்சினைகளை கருத்திற்கொண்டே பிரதானமாக அ.தி.கொ. முறை நடைமுறைப்படுத்தப்படுவதை வன்மையாக எதிா்த்தனா்.

தொலைபேசி சேவை வழங்குபா்கள், தனியாா் கம்பனிகள், பாவனையாளா் குழுக்கள்/கழகங்கள், சங்ககள் மற்றும் தொலைத் தொடா்புகள் துறையிலுள்ள உயா்தொழிலா்கள் உட்பட தனியாட்களிடமுமிருந்து 2,461 சமா்ப்பணங்கள் சமா்ப்பிக்கப்பட்டிருந்தன. இப்பிரிவிலுள்ள ஆட்களுள் பெரும்பான்மையோா் அ.தி.கொ. முறை நடைமுறைப்படுத்தப்படுவதை வலியுறுத்தி எதிா்ப்பு தெரிவித்தனா். கிடைக்கப்பெற்ற சமா்ப்பணங்களின் மேலும் ஒரு பகுப்பாயவு வருமாறு:

| சமா்ப்பணங்களின் பிரிவு | சமா்ப்பணங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தொலைபேசி சேவை வழங்குபவா்கள் | 08 |
| தனியாா் கம்பனிகள், பாவனையாளா் குழுக்கள்/சங்கங்கள் /கழகங்கள் | 18 |
| தொலைத் தொடா்புகள் துறையிலுள்ள உயா்தொழிலா்கள் உட்பட தனியாட்கள் | 2,435 |
| ஒழுங்குசெய்யப்பட்ட பொது மக்கள்/பாவனையாளா் குழுக்கள் (ஒத்த உள்ளடக் ங்கள்) | 1,619 |
| மோத்தம் | 4,080 |

வாய்மூல சமா்ப்பணங்கள் /சாட்சியங்கள்

குழு பகிரங்க விசாரணையின் நோக்கெல்லைக்கு இணங்கியொழுகிய 81 சமா்ப்பணங்களை குறுநிரலிட்டது. அத்துடன் எந்த விடயங்கள்மீது வாய்மூல சாட்சியம் தேவைப்படுத்தப்பட்டதோ அந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு வாய்மூல சமா்ப்பணங்களைச்செய்யுமாறு 50 ஆட்களுக்கு அழைப்பு விடுத்தது. குழு 2005 ஆகஸ்ட் 1ஆம் 3ஆம் 5ஆம் திகதிகளில் இ.தொ.ஒ.ஆ. வில் விசாரணைகளை

நடத்தியது. பகிரங்க விசாரணைகள்பற்றி 2005 யூலை 28ஆம் 29ஆம் 31ஆம் திகதிகளில் தேசிய பத்திரிகைகளில் பகிரங்க அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. மூன்று நாட்களும் பல்கலைக்கழக மாணவர்கள், பாதுகாப்புப்படை உறுப்பினர்கள், பாவனையாளர் குழுக்கள், சிறிய, நடுத்தர தொழில் முயற்சியாளர்கள், மற்றும் ஏனையோர் உட்பட பெருந்தொகையான பொது மக்களின் பங்கேற்பு இருந்தது.

குழுவால் கருத்திற்கொள்ளப்பட்ட பிரச்சினைகள்

**i.** <u>வலையமைப்பு முடிவுறுக் கட்டணங்களைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட செலவு மாதிரிகையையும் முறைமையியலையும் ஏற்றுக்கொள்ளும் தன்மை:</u> பொது மக்கள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த அழைப்பு முடிவுறுச் செலவின் கணிப்பீட்டை விவரித்ததும் இலங்கையில் நிலையுறு மற்றும் செல்லிடத் தொலைபேசி செயற்பாட்டாளர்களுக்கான அழைப்பு முடிவுறுக் கட்டணங்களை குறித்துரைத்ததுமான ஆலோசகர்களின் அறிக்கையை எடுத்துக்காட்டி ஆலோசகர்கள் இடைப்பிணைப்பு அழைப்பு முடிவுறுச் செலவைக் கணிப்பிடுவதற்கு முற்றிலும் பிரித்தொதுக்கப்பட்ட வரலாற்று ஆகுசெலவு கோட்பாட்டைப் பயன்படுத்தியதன் காரணம், அது தோதானது என்பதற்காக அல்ல ஆனால் நேர நெருக்கடியின் காரணமாகவே என்பதனை வலியுறுத்தினர். “நேர நெருக்கடியை” நியாயப்படுத்தியமை பொது மக்களால் வன்மையாக விமர்சிக்கப்பட்டது. ஒரு செலூலர் செல்லிடத் தொலைபேசி செயற்பாட்டாளரைத் தவிர ஆகுசெலவுத் திட்டத்திற்கும் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட முறைமையியலுக்கும் எவருமே ஆதரவுகாட்டவில்லை. பகிரங்க விசாரணையில் பங்குபற்றிய உயர்தொழிலர்களும் ஒருசில நி.பொ.தொ.வ. (PSTN) செயற்பாட்டாளர்களும் நீளோட்ட அதிகரிப்புச் செலவு முறையை வலையமைப்பு முடிவுறு ஆகசெலவைக் கணிப்பதற்கு மிகவும் தோதான ஆகுசெலவு முறைமையியல் என விதப்புரை செய்தனர். எனினும் ஒரு செலூலர் செயற்பாட்டாளர் நீ.அ.ஆ. முறையைவிட மு.பி.வ.ஆ. முறையின் நன்மைகளை வலியுறுத்தி மு.பி.வ.ஆ. முறையை ஆதரித்தார்.

பொது மக்களின் அபிப்பிராயம் என்னவென்றால் வலையமைப்பு முடிவுறு செலவைக் கணிப்பதற்கு மூலதனத்தின் மதிப்பீடுசெய்யப்பட்ட சராசரி ஆகுசெலவின் (மூ.ம.ச.ஆ. – WACC) 23.4% நூற்றுவீதம் மிகவும் கூடுதலானதாகும் என்பதாகும். இலங்கையில் தற்போதைய வட்டிவீதமும் தொலைத்தொடர்பு தொழிலின் எதிர்மறை விளைவுக் காரணியும் குறைவானவையே என்பதும் வலியுறுத்தப்பட்டது. எனினும் ஒருசில நி.பா.தொ.வ. செயற்பாட்டாளர்கள் மூ.ம.ச.ஆ. வீதத்தின் தாக்கம் இறுதிப் பெறுபேற்றை வரம்பளவில் பாதிக்கும் என எடுத்துரைத்தனர். கணிப்பீடுகளுக்கு 23.4% பயன்படுத்தப்பட்டபோதிலும் மூ.ம.ச.ஆ. வாக 18.1% வீதத்தை மாத்திரமே ஆலோசகர்கள் விதந்துரைத்துள்ளதாக குழு குறிப்பிட்டது.

வலையமைப்பு முடிவுறு ஆகுசெலவைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆகுசெலவுத் தரவு வழக்கொழிந்ததாகும் என்பதனைப் பொது மக்கள், குழுவின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். ஆலோசகர் 2002ஆம் ஆண்டின் ஆகுசெலவு விவரங்களைப் பயன்படுத்தியே வலையமைப்பு முடிவுறு அறவீடுகளைக் கணித்திருப்பதாக குழு எடுத்துரைத்தது. அண்மைக்காலத்தில் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பவியல் முன்னேற்றம் கண்டிருப்பதன் காரணமாக செலவு குறையவேண்டும் என பொது மக்கள் வாதாடினர். செயற்பாட்டாளர்களும் தங்கள் கடைசி ஆகசெலவுத் தகவலைப் பயன்படுத்தி வலையமைப்பு முடிவுறு ஆகுசெலவை மீளவும் கணிப்பிடுவதற்கு உடன்பட்டனர்.

**ii.** **அ.தி.கொ. திட்டத்தின்கீழ் நிலையுறு அணுக்க வாடிக்கையாளர்களின் கட்டுப்படியாகும் தன்மை:** தற்போதுள்ள அழைப்புக் கட்டணங்கள், குறிப்பாக நிலையுறு அணுக்க அழைப்புக் கட்டணங்கள் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளுடன் ஒப்புநோக்குமிடத்து இலங்கையில் மிகவும் அதிகம் என பொது மக்கள் வன்மையாக வலியுறுத்தினர். செல்லிட சந்தாதாரர்களின் எண்ணிக்கை நிலையுறு அணுக்கச் சந்தாதாரர்களையும்விட மிகவும் அதிகம் எனினும் நிலையுறு அணுக்கத் தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை மிக அதிகம் எனப் பொது மக்கள் மேலும் வலியுறுத்தினர். தங்களுக்குச் சொந்தமாகத் தொலைபேசிகளை வைத்திருக்க வசதியற்றவர்கள் தங்களது தொலைத்தொடர்புத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு கட்டணத் தொலைபேசிகளில் அல்லது தகவல்தொடர்பு நிலையங்களிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளனர் என்பதும் தற்போதுள்ள அறவீடுகளைக்கூட அவர்களால் சமாளிக்க முடியாதுள்ளது என்பதுமே இதற்குரிய காரணமாகும். தங்கள் சேவைகளைப் பயன்படுத்தும் மக்கள் விலைகளையிட்டு மிகவும் உன்னிப்பாக இருப்பதாகவும் மேலும் விலை அதிகரிப்புகளை அவர்களால் சமாளிக்க முடியாது எனவும் கட்டணத் தொலைபேசிக் கம்பனிகளினதும் தகவல்தொடர்புப் பணியகங்களினதும் பிரதிநிதிகள் உறுதிப்படுத்தினர்.

அறுதிப் பெரும்பான்மையோர் தற்போதுள்ள அறவீடுகளைத் தவிர வேறு எந்தத் தொகையையும் செலுத்த மறுப்புத் தெரிவித்த அதேவேளை மிகச் சிலர் அ.தி.கொ. முறையின்கீழ் 50 சதம் முதல் ரூபா 1/- வரையிலான மேலதிகத் தொகையொன்றைச் செலுத்த விருப்பம் தெரிவித்தனர். 1998 நவம்பரில் நிலையுறு அணுக்கச் செயற்பாட்டாளர்களுக்கிடையில் இடைப்பிணைப்பு பற்றிய நியதி நிபந்தனைகள் மீதான தீர்மானமொன்றையும் 1999 யூன் மாதத்தில் செல்லிட மற்றும் நிலையுயுறு அணுக்கச் செயற்பாட்டாளர்களுக்குமிடையிலும் செல்லிடத்திற்கும் செல்லிட செயற்பாட்டாளர் களுக்குமிடையில் இடைப்பிணைப்பு பற்றிய நியதி நிபந்தனைகள்மீதான மற்றுமொரு தீர்மானத்தையும் ஆணைக்குழு வழங்கியுள்ளது எனக் குழு அவதானித்தது. இத்தீர்மானத் திற்கிணங்க நிலையுறு அணுக்க வலையமைப்பில் உச்ச நேரங்களில் நிமிடம் ஒன்றிற்கு அழைப்பு முடிவுறு கட்டணம் ரூபா 1.50 ஆகும்.

iii. அ.தி.கொ. முறையின்கீழ் இலவச உள்வரு அழைப்பு நிமிடங்களுடன்/சமமான உள்வரும் அழைப்புக் கட்டணங்களுடன் பிணிக்கப்பட்ட செலூலர் செல்லிடத் தீர்வைத் திட்டங்களுக்கு என்ன நடக்கும்? பொது மக்கள் தெரிவித்த கருத்துகளுக்கிணங்க நிலையுறு அணுக்க வாடிக்கையாளர்கள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அநேகருக்கு இலவச உள்வரு நிமிடங்கள் உட்பட தீர்வைத் திட்டங்கள்கொண்ட செல்லிடத் தொலைபேசிகள் உண்டு. அவர்கள் தங்களது தகவல்தொடர்புத் தேவைப்பாடுகளையும் பாவனை நடைமுறைகளையும் கருத்திற்கொண்டே செல்லிடத் தீர்வைத் திட்டங்களைத் தெரிவுசெய்துள்ளனர். ஒரு சிலர் கூடுதலான இலவச உள்வரு அழைப்பு நிமிடங்களைக்கொண்டவையும் ஒப்புநோக்குமிடத்து கூடுதலான மாதாந்த வாடகை அத்துடன்/அல்லது அழைப்பு அறவீடுகள் அல்லது வருமானக் கடப்பாடுகள்கொண்ட செல்லிடத் தீர்வைத் திட்டங்களுக்கு ஒப்பப்பணம் செலுத்தியுள்ளனர். அதேவேளை வேறு சிலர் குறைந்த மாதாந்த வாடகை அத்துடன்/அல்லது ஒரு சில இலவச உள்வரு அழைப்பு நிமிடங்கள் கொண்ட செல்லிடத் தீர்வைத் திட்டங்களுக்கு ஒப்பப்பணம் செலுத்தியுள்ளனர். எந்த விலைக் கட்டமைப்பின்கீழ் செல்லிடத் தொலைபேசிகளின் அணுக்கத்திற்கு மேலதிக அறவீடொன்றைச் செலுத்தவேண்டியிருக்குமோ அந்த ஏதேனும் விலைக் கட்டமைப்புககுக எதிராக இவர்கள் வன்மையான எதிர்ப்பு தெரிவித்தனர்.

செலூலர் செல்லிட செயற்பாட்டாளர்களின் எழுத்திலானவையும் வாய்மொழி மூலமானவையுமான சமர்ப்பணங்களின்படி அ.தி.கொ திட்டத்தின்கீழ் செலவின்

அமைப்பமுறையைக் கருத்திற் கொள்ளு மிடத்து தீர்வைகள் மீளாய்வுசெய்யப்படவேண்டியதில்லை என்பது அவர்களின் கருத்தாகும். ஆனால் தீர்வை அதிகரிக்குமா, குறையுமா அல்லது அப்படியே தொடர்ந்திருக்குமா என்பதுபற்றி தெளிவாகப் புலப்படுத்தப்படவில்லை.

iv. **அ.தி.கொ. தீர்வை தொடர்பிலான வேறு பிரச்சினைகள்:** பகிரங்க விசாரணைக்குச் சமூகமளித்திருந்த தொலைத்தொடர்புகள் துறையிலுள்ள உயர்தொழிலர்கள் புதிய தொழில்நுட்பவியல்களின் புத்தாக்கத்தின் காரணமாக தொலைத்தொடர்பு வலையமைப்புகளின்
வரி இணைப்பொன்றிற்கான செலவு குறைக்கப்படவேண்டும் என வாதாடினர். அதற்கிணங்க தொலைத்தொர்பு சேவைகளுக்கான அறவீடுகள் குறைக்கப்படுதல் வேண்டும். வலையமைப்பு முடிவுறு அறவீடுகள் போக்குவரத்து முடிவுறு நிலையுடன் இணைக்கப்பட்ட தோதான வலையமைப்பு உறுப்புகள் இனம் காணப்படாமல் கணிப்பிடப்பட்டுள்ளன எனவும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

பேஜர் செயற்பாட்டாளர்களின் கருத்துப்படி அ.தி.கொ. முறை அறிமுகம் செய்யப்படுமா செய்யப்படமாட்டதா என்பது பற்றி தீர்க்கமான முடிவொன்று இல்லாதபடியால் தொலைத்தொடர்பு சந்தையில் ஒரு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளதுடன் பேஜர் தொழிலையும் மோசமாகப் பாதித்துள்ளது. 1999 யூன் மாத்தில் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட செல்லிட மற்றும் நிலையுறு அணுக்கச் செயற்பாட்டாளர்களுக்கிடையிலான இணைதொடர் மீதான நியதி நிபந்தனைகள் பற்றிய தீர்மானத்தின்படி அ.தி.கொ. முறைக்கு நிலைமாறுவதனை ஆணைக்குழு கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும் இந்நோக்கத்திற்கென நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட பொது மக்களின் எதிர்ப்புக் குரலின் காரணமாக இது நடைமுறைப்படுத்தப்படாவிட்டாலும் அ.தி.கொ. முறை 2004 மார்ச் 1ஆம் திகதியிலிருந்து நடை முறைப்படுத்தப்படுவதை ஆணைக்குழு அறிவித்துள்ளது என்பதனக் குழு மேலும் அவதானித்தது.

**அழைக்கும் திறத்தவரின் கொடுப்பனவு (அ.தி.கொ.) முறையை அறிமுகம் செய்வதற்கு ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வையை மீளாய்வுசெய்தல் தொடர்பில் கருத்திற்கொள்ள்ப்பட்ட பிரச்சினைகள் பற்றி குழுவின் கருத்துக்கள்**

**பொது மக்களின் எழுத்திலானவையும் வாய்மொழிமூலமானவையுமான சமர்ப்பணங்களை கருத்திற்கொள்கையில் குழுவின் அபிப்பிராயம் வருமாறு:**

செலவு முறையியல் அதாவது FAHC, WACC கட்டண வீதம் செல்லிட வலையமைப்பு முடிவுறு செலவைக் கணிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படும் செலவுத் தரவு இன்றைகாலக கட்டத்திற்குத் தோதானதல்ல. அதற்கிணங்க அ.தி.கொ. முறையை அறிமுகம் செய்வதற்கு மேற்படி கணிப்பின் அடிப்படையில் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வை தோதானதல்ல.

**பகிரங்க விசாரணையின் முழு நடைமுறை பற்றி குழுவின் கருத்து**

குழு எழுத்திலான சமர்ப்பணங்களை குறுநிரலிட்டபொழுது 81 சமர்ப்பணங்கள் அதாவது எழுத்திலான
மொத்தச் சமர்ப்பணங்களுள் 2% வீதமானவை மட்டுமே பகிரங்க விசாரணையின் நோக்கெல்லைக்கு
அமைந்திருந்தது என்பதனை குழு அவதானித்தது. எனினும் எஞ்சிய 98% வீதமானவை அ.தி.கொ. முறை

நடைமுறைப்படுத்தப்படுவதனை வன்மையாக எதிர்த்தன. மேலும் சாட்சிசயமளிக்க அழைக்கப்பட்ட
ஆட்களிடமிருந்தும் விராசணைக்கு சமூகமளித்த பொது மக்களிடமிருந்தும் அ.தி.கொ. முறை நடைமுறை
படுத்தப்படுவதற்கு கடும் எதிர்ப்பு இருந்ததை குழு அவதானித்தது. பொது மக்கள் தங்கள் எதிர்ப்பிற்குப்
பின்வரும் காரணங்களை எடுத்துரைத்தனர்:

- **I.** கட்டுப்படியாகும் தன்மை.
- **II.** ஸ்ரீ.ல.ரெ. வாடிக்கையாளர்கள் தற்போதுள்ள 200 இலவசக் கூறுகளை இழக்க நேரிடும்.
- **III.** செல்லிட செயற்பாட்டாளர்கள் அனைவரும் இலவச உள்வரும் நிமிடங்களுடன் பிணிக்கப்பட்ட தீர்வைத்திட்டங்களை வழங்குகின்றனர்.
- **IV.** அ.தி.கொ.முறை பற்றிய விழிப்புணர்வு இல்லாமை.
- **V.** செலூலர் செயற்பாட்டாளர்களின் இலாப வாய்ப்பு.
- **VI.** நிலையுறு அணுக்கச் செயற்பாட்டாளர்களுக்குப் பிரதிகூலங்கள்.
- **VII.** ஸ்ரீ.ல.ரெ. செக்கன் ஒன்றிற்கான விலைப்பட்டியல் தயாரிப்பிற்குச் செல்லாமை.
- **VIII.** நிலையுறு செயற்பாட்டாளர்களால் தனித்தனி விடயம் ரீதியிலான விலப்பட்டியல் வழங்காமை.

பொது மக்களின் நன்மைக்காக ஒழுங்குபடுத்துதல் தொடர்பான சிறந்த முடிவுகளை எடுப்பதற்குக் கூடுதலான தகவலைத் திரட்டுவதே பகிரங்க விசாரணையொன்றை நடத்துவதன் நோக்கம் எனக் குழு நம்புகின்றது. அ.தி.கொ. முறையை நடைமுறைப்படுத்துதல்மீது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட தீர்வையை மீளாய்வுசெய்வதற்குக் குழுவொன்று நியமிக்கப்பட்டபோதிலும் அனைத்துப் பங்காளர்களாலும் செய்யப்பட்ட சமர்ப்பணங்களைக் கருத்திற்கொள்ளுமிடத்து அத்தகைய மீளாய்வுக்கான அவசியம் ஏற்படவில்லை.

அ.தி.கொ. முறை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிராக மக்களின் குரல் உரத்த சத்தமாகவும்
தெளிவாகவும் இருந்தது என்பது குழுவின் அபிப்பிராயமாகும்.

எழுத்திலானவையும் வாய்மொழிமூலமுமான சமர்ப்பணங்களைப் பகுப்பாய்வுசெய்ததன்பின்னர் அ.தி.கொ.
முறை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படக்கூடாது எனக் குழு தீர்மானித்துள்ளது. இதனைக்
கருத்திற்கொள்ளுமிடத்து அ.தி.கொ. முறையை நடைமுறைப்படுத்துவதற்கு ஆணைக்குழுவால்
அங்கீகரிக்கப்பட்ட தீர்வையை மீளாய்வுசெய்வதற்கான அவசியம் இருப்பதாகக் குழுவுக்குத்
தோன்றவில்லை.

அனுர அமரசேகர
தவிசாளர், விசாரணைக்குழு
திகதி:

ஹந்தபான்கொட வசந்த குமார இந்திரஜித்
உறுப்பினர், விசாரணைக்குழு
திகதி:

ஹப்புவாராச்சிகே பிரியங்க கருணாரத்ன
உறுப்பினர், விசாரணைக்குழு
திகதி:

ருவணி சௌமியா குணரத்ன
உறுப்பினர், விசாரணைக்குழு
திகதி:

அனுர மஹாநாம ஜயவிக்ரம
உறுப்பினர், விசாரணைக்குழு
திகதி:

ரமணகே சந்திரவன்ச ரத்நாயக
உறுப்பினர், விசாரணைக்குழு
திகதி:

வத்துதந்திரிகே தர்மசிறி டீ அல்விஸ்
உறுப்பினர், விசாரணைக்குழு
திகதி: